விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இனிய இதழ்

indhrumail@gmail.com
70940 53241
மாதமிருமுறை இதழ்
16-31 மே 2025
15-ம் இதழ்

மைக்ரோ கதை

களவு

மலர்மதி
செல் 8667417874



பேருந்தில் செம நெரிசல். விக்னேஷீக்கு முன்பாக நின்றிருந்த பெண்ணின் கழுத்தில் தங்கச் செயின் கொக்கி கழன்று தொங்கிக் கொண்டிருந்தது. சரியான சந்தர்ப்பம். நைசாக உருவிக்கொண்டான்.

எப்படியும் ஒரு பவுன் தேறும். வீட்டை அடைந்தபோது தம்பி கேட்டான். எங்கேண்ணே உன் ப்ரேஸ்லெட்?

திடுக்கிட்டு கையைப் பார்த்தான் விக்னேஷ். இரண்டு பவுன் ப்ரேஸ்லெட்டை எவனோ களவாடியிருந்தான்.

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

அனைவருக்கும் வணக்கம். இந்த இதழில் இன்று இதழுக்கு தொடர்ந்து படைப்புகள் அனுப்பியும், ஊக்கப்படுத்தியும், ஆதரவு தெரிவித்தவர்களுக்கு கீ செயின் ஹோல்டர் அனுப்பிவைக்கப்பட்டது. அதுவும் அவரவர் பெயரில் தயார் செய்து சிறப்பாக அனுப்பப்பட்டது. இதில் மேலும் சிலருக்கு தயார் செய்யப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

படைப்பாளர்கள் இன்று இதழின் பக்க அளவை கருத்தில் கொண்டு சுருக்கமாக அனுப்பிவைக்கவும். பெரிய கதைகளை இன்று இதழில் வெளியிட இயலாது. எனவே புதிய எழுத்தாளர்கள் இதை கருத்தில் கொண்டு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவும். இன்று இதழை மாதமிருமுறை இதழாக மாற்றி விட்டதை பலரும் அறியாமல் இதழ் எப்போது வரும்? என்று கேட்கிறீர்கள்... இன்று ஈ இதழ் மாதமிருமுறை என்பதை மனதில் வைத்துக்கொள்ளவும்.
தங்கள் ஆதரவையும், படைப்பையும் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

நன்றி...

ஆசிரியர்

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ✍வெ.கோபிநாத்

Su	M	Tu	We	Th	Fr	Sa
May 2025				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

" மருத்துவர்
போதித்தார்
இதயம்
இடப்பக்கமென!

:அன்பு காதலி
போதித்தாள்
என் இதயம்
தன்னிடமே என!"

"அவளைப்
பார்ப்பதற்கு முன்
இதய ஒலி
லப் டப்
பார்த்த பின்
இதய ஒலி
லவ் டப் என
கேட்கிறதே !"

"ஓ இதுதான்
காதல் நோயா? :



கே.அசோகன்
சென்னை

🌹💌போகிற போக்கில்
கவிதை எழுதி விட்டுப் போகிறது
உன் கண்கள்!
படித்து ரசிக்க ஆரம்பிக்கிறது
என் கண்கள்!

*🌹✍முத்து ஆனந்த்
வேலூர்

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

பல்பு கதைகள்



முத்து ஆனந்த் வேலூர்
செல் : 7010482479



பாஸ்கர் "ஐ லவ் யூ" சொல்வான் என்று காத்திருந்த யமுனா இன்றைக்கும் "பல்ப்" வாங்கினாள்!



எல்லோருக்கும் அடிக்கடி "பல்ப்" கொடுக்கும் சவீதா தான் ஒரு "பல்ப்" கடைக்காரனைக் "காதலிப்போம்" என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை!



வரவுக்கு மேல் "செலவு" செய்யும் கார்த்திக் தன் மனைவி அடிக்கடி பணத்தை எடுத்து வைத்துக் கொள்வதால் திடீர் திடீரெனப் "பல்ப்" வாங்கினான்!



அடிக்கடி "பல்ப்" வாங்கும் சரண் தன் காதலி அகல்யாவிடம் "ஆண் பாவம்" கூடப் பொல்லாததுதான்டி என்றான்!



தன் பொண்டாட்டி எது கேட்டாலும் வேறொரு "பதில்" சொல்லி அவளுக்குப் "பல்ப்" கொடுத்துப் பதிலுக்குப் "பல்ப்" வாங்கி அடங்கினான் கோபால்!

அடுத்த இதழில்

அல்வா கதைகள்

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241



தடம்



பார்வைகள்
உன்னைக் காணவே...
பரிதவிக்க
கால்களும் வழி மாறி
உன் வீதி வழியே நடக்க...
எதுவுமே என் வசம் இல்லையே...
என்னை உன் வசம்
தந்த பின்னே.....



கோவைக்கவி
புவனா

இன்று ஈ இதழ் | இன்று ஈ இதழ் | 70940 53241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று எ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

வலையில் மாட்டியது...







இன்று எ இதழ் | இன்று எ இதழ் | 70940 53241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

Types of Tapes



கலர் கலர் மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக் கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ் Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...


இன்று இதழை உங்கள் நண்பருக்கும் அறிமுகப்படுத்துங்கள்

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

காதல் டயலாக்



உன் ஹஸ்பெண்ட் "ஜூனியர் விகடன், தமிழன் எக்ஸ்பிரஸ், காலைக்கதிர், காமதேனு" இப்படி எல்லாத்திலயும் "டயலாக்" எழுதியிருக்காராமே!"
ஆனா, என் கிட்டே மட்டும் "பேசவே" மாட்டாரு!"

"ஐய்யய்யோ.....அப்புறம்?!"

"ஒன்லி ஆக் ஷன் தான்!"

சத்யா பிரியன்



காதலி நடந்து சென்றால்....!!
==========

காலும் கொலுசும் கதைபேசும்-
- உன் கணுக்கால் வளைவில்
மலை சரியும்.

வாயும் இதழும் சிவப்பழகில்
அந்த வானவில் கூடத்
தலை கவிழும்!

விழிகள் பார்வைக் கூர்மையிலே
அந்த வேலும் வாளும்
கூர் மழுங்கும்!!

தேனும் பாலும் சுவை இழக்கும்
உன் செவ்விதழ்
ஊரும் நீர்ச் சுனையில்!

பருவ மேனி அழகினிலே
கலந்த பாலும் மஞ்சளும்
நிறமிழக்கும்!!

கம்பனும் ஷெல்லியும்
பின்தொடர-- என்
காதலி முன்னால்
நடந்து செல்வாள்!!

குடந்தை பரிபூரணன்



முடிந்தளவு பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்போம்

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241



அன்பின் வரம்



தனித்துவமான
அன்பிற்கு முன்னால்
எல்லாம்
அடங்கி முடங்கிப் போவதும்
நிதர்சனமான உண்மை தான்...
ஆனால்
அந்தத் தனித்துவமான
அன்பைப் பெறுதலே வரம்!

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.



தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) புகார்களைப் பதிவு செய்ய பல வழிகளை வழங்குகிறது. பொதுவான விசாரணைகள் மற்றும் உதவிகளுக்கு, நீங்கள் 94987 94987 என்ற எண்ணை அழைக்கலாம். மின்வெட்டு புகார்களுக்கு, நீங்கள் 1912 (BSNL பயனர்களுக்கு) அல்லது 0441912 (BSNL அல்லாத பயனர்களுக்கு) என்ற எண்ணை அழைக்கலாம். கூடுதலாக, நீங்கள் TNEB-ஐ அவர்களின் வலைத்தளம், TANGEDCO மொபைல் செயலி அல்லது 94458-50811 என்ற எண்ணுக்கு WhatsApp செய்தியை அனுப்புவதன் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

முகவர்கள் தேவை

- நீங்கள் LIC, Post Office முகவரா?
- தாலுக்காவிற்கு ஒருவருக்கு மட்டுமே முகவர் வாய்ப்பு...
- பகுதி நேரமாக வேறு வேலை தேடுபவரா?
- ஊரில் அதிகம் நண்பர்களை கொண்டுள்ளீர்களா?
- உங்கள் விபரங்களை 7094053241 என்ற எண்ணுக்கு உங்கள் சுய விபரங்களை அனுப்புங்கள்...



இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் ஈ பதிப்பு 70940 53241 Whatsapp

இரு பக்க கதை



நேரில் நின்ற இறை

சசிகலா விஸ்வநாதன்

இன்று காலை நடைப்பயிற்சி. இன்று தனியாகத்தான் நடக்கிறேன். என்னவர் குரு தரிசனம் செய்ய சிருங்கேரி சென்றுள்ளார். விரைவில் வீடு திரும்ப எந்த ஒரு அவசரமும் இல்லை. என் குழந்தைகளின் சொல்படி இப்போதெல்லாம் அலைபேசி என் கையிலும், கேட்கும் கருவி என் செவிகளிலும். அவை எனக்கு ஒரு பாதுகாப்பு என்றும், ஏதும் அசாதாரண தருணத்தில் அவை உபயோகமாக இருக்கும், என்பது, அவர்கள் நினைப்பு. என்னுடைய பயமெல்லாம் நான் அவைகளை எங்காவது தவற விட்டு விடுவேனோ? என்பதுதான். அது அவர்களுக்குப் புரியாது. என்னை கவனமாகப் பார்த்துக் கொள்ளுவதில், அது அவர்களுடைய பங்கு. அதை நான் ஏன் நிராகரிக்கவேண்டும்? அதுவும் சரிதான்.

நடை பயிற்சியில் இன்று ஒரு புது வழியில் செல்ல ஆரம்பித்தேன். போகும் வழியில் இரண்டு மூன்று பாழ் கிணறுகள். நான் எட்டிப்பார்க்க வெளவால் நாற்றம். பூனை ஒன்றும் குதித்து ஓடியது. கிணற்றின் உள்ளே குப்பையும் செத்தையும். முள்ளாலும் மூடியிருந்தன. இன்னும் சிறிது தூரம் நடக்க... வெள்ளி விழிக்கையிலேயே குளம் வெட்டிக் கொண்டு இருந்தார்கள். நீர் ஊற்றுக்கண் திறந்து நீர் சுரந்து வருமா.... தெரியாது. நம்பிக்கை தானே வாழ்க்கையை முன்னோக்கி செலுத்துகிறது!

மேலே செல்லச் செல்ல இடது புறம் குயில்களின் இனிமையான கூவல்? வலப்பக்கம் மயில்களின் அகவல்; அதிலும் ஒரு இனிமை இருந்ததாக எனக்குத் தோன்றியது. கேட்பவரின் மன நிலையைப் பொறுத்தே இனிமையும் கடுமையும். ஒரு மேடு மேலேறி இறங்குவதற்குள் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. காதில் கருவி இருப்பதால் சத்தம் சற்றுக் கூடுதலாகத் கேட்டதை, நான் சங்கடமாகத்தான் உணர்ந்தேன். இது எனக்கு உபயோகமாகத் தெரியவில்லை. நாளையிலிருந்து இதோடு வரக்கூடாது. அல்லது கைப்பையில் எடுத்து வரலாம். எங்கேயாவது தொலைந்துவிட்டால்... இரண்டு லட்சம் ரூபாய்; மீண்டும் செலவு செய்ய வேண்டும்.

இவ்வாறு யோசனை செய்துகொண்டே, மேட்டில் இருந்து இறங்கியதும் கண்ணில் பட்டது ஒரு மாந்தோப்பு. கொத்துக் கொத்தாய் மாங்காய்கள்; கிளை கொள்ளாமல். பார்க்கவே பரவசமாக இருந்தது. கார் போகும் பாதை மறைந்து, ஒத்தையடி பாதையாக மாறியது கூட அறியாமல் மயில் அகவுதலின் ஒலி இன்னிசையாக என்னை வழிநடத்த, நடந்து கொண்டே இருந்தவளின் நடை தடைப்பட்டது. சிறு செடிகளிலும் புல்களிலும் நாணலிலும் அந்த ஒத்தையடி பாதை மறைய, நான் லேசான திகிலை அடைந்தேன். என் தொலைபேசியில் இன்னும் எனக்கு தொடர்பு கிடைத்தது எனக்கு பெரிய ஆச்சரியம். ஆனாலும்கூட அதனால் எனக்கு என்ன பயன் ஆகும்?

நான் எங்கே இருக்கிறேன்? என்பது எனக்கே தெரியவில்லை. எவருக்கு தொலைபேசி, எப்படி வழி கேட்பது? அது மட்டுமல்ல; "நீ ஏன் அங்கெல்லாம் போனாய்? என்று கேட்டால், மயிலின் அகவல் என்னைக் கூட்டிச் சென்றது என்றால்... எனக்கு வசவு மழைதான். அதை ஏன் நான் வலுவுக்கு வாங்க வேண்டும்? திரும்பிப் போகலாம் என்று திரும்பினவளுக்கு ஒரு அதிர்ச்சி?. சிதை ஒன்று எரிந்து கொண்டிருந்தது; என் வலது பக்கம். இடது புறம் திரும்ப.... கல்லறைகள் பலவற்றை பார்க்க நேர்ந்தது. "ஆஹா! நடந்து கொண்டே இறுதியாக ஒரு மயானத்தின் உள்ளே வந்து விட்டிருக்கிறேன். இப்போது என்ன செய்வது? வந்த பாதையின் தடம் கூட எனக்குத் தெரியவில்லையே." என்று பயந்தேன்.

தொலைவில் எவரோ ஒருவர் வருவதைப் பார்த்த எனக்கு, போய்க் கொண்டிருந்த உயிர் திரும்ப வந்தது. அவரை எப்படிக் கூப்பிடுவது? "சார்!சார்!" என்று கூப்பிடுவது, என் காதிலேயே விழவில்லை; அந்த அளவு திகில் என்னை ஆட்கொண்டிருந்தது. அவரது செவியில் எப்படி விழும்? அருகில் இருந்த மா மரத்திலிருந்து ஒரு மாங்காயைப் பறித்து, குறி பார்த்து அவர் மேல் எறிந்தேன். குறி தப்ப, அவர் கவனத்தைத் திருப்ப இயலவில்லை. அதிர்ஷ்ட வசமாக அவர் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தார். மீண்டும் மாங்காய்களைப் பறித்து அவர் பக்கம் வீசி எறிந்து கொண்டிருக்க... ஒரு கணம், அவர் நின்றார். மாங்காய்கள் எங்கிருந்து விழுகின்றன; என்று நிதானிக்க ஆரம்பித்தார். "எப்படி ஒரே திசையிலிருந்து இத்தனை மாங்காய்கள் விழும், என்று யோசிக்க ஆரம்பித்திருப்பாரா;" என்று எனக்குள் ஒரு நினைப்பு. இப்போது அவர் என்னைப் பார்த்துவிட்டார். என் பக்கமாக வேகமாக வர ஆரம்பித்தார்.

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

கூப்பிடு தூரத்தில் வந்ததும் " சார்! இங்கிருந்து வெளியே பிரதான சாலைக்கும் போக பாதை இருக்கிறதா? என்று ஆங்கிலத்தில் கேட்க" யு டோன்ட் ஓர்ரி! தேர் இஸ் எ வே. ஐ வில் ஷோ யு தி வே . இட் இஸ் ஃபுல் ஆஃப் க்ராஸ் அண்ட் தார்னி புஷஸ். வி ஹேவ் டு பி கேர் ஃபுல் எபௌட் நாட் ஸ்டாம்பிங் ஆன் ஸ்னேக்ஸ். த ப்ளேஸ் இஸ் ஃபுல் ஆஃப் ஸ்னேக்ஸ். த ப்ளேஸ் இஸ் மார்ஷி டூ" என்றார். அருகில் வந்தவர், இஃப் யு டோன்ட் மைண்ட்; ப்ளீஸ் ஹோல்ட் மை ஹேண்ட். ஐ வில் கைட் யு டு த மெயின் ரோட்" என்றார்?.

கொஞ்சமும் தயங்காமல் அவர் முன் கையை நான் பிடித்தேன். அவர் என்னை கல்லும் முள்ளும் பாம்பும் நிறைந்த சதுப்பு நிலத்தை கடந்து நடத்திக் கொண்டு போய் ஐந்தே நிமிடத்தில் மெயின் ரோட்டில் கொண்டு வந்து சேர்ந்தார். நிம்மதியாக அவருக்கு நன்றி சொல்ல முற்பட...அவர் என்னை மறித்து என்னிடம் ஆங்கிலத்தில் ஒரு வினா வைத்தார்." மேடம்! என்னை ஏன் , எப்படி நம்பினீர்கள்! எது உங்களை என் மேல் நம்பிக்கை வைக்கத் தூண்டியது?"

ஒரு கணம் தயங்கின நான், அவரிடம் பதில் வினா ஒன்று வைத்தேன்.

"சார் டு யு பிலீவ் இன் காட்.?"

" எஸ்! அஃப் கோர்ஸ். ஹீ ஒன்லி கைட்ஸ் மை வே; எவ்ரி டே"

இஃப் சோ; ஹேவ் யு எவர் ஸீன் ஹிம்?

அவர் அதற்கு பதில் சொல்லத் தயங்கிய நேரத்தில்,

"வென் யு பிலீவ் இன் காட்.... ஹூம் யு ஹேவ் நெவர் ஸீன்; ஒய் ஐ கேன் நாட் பிலீவ் இன் ஹிம்; வென் ஹி இஸ் இன் ஃப்ரன்ட் ஆஃப் மி; கைடிங் மை வே", என்று புன்முறுவல் பூத்த வண்ணம், அவர் தொலைபேசி எண்ணைக் கேட்டேன்?. அவர் தயங்க, கண்ணில் கண்ட கடவுளிடம் எப்போதாவது பேச எனக்கு அவசியம் ஏற்பட்டாலோ; அவர் என்னிடம் மீண்டும் பேச விரும்பினாலோ; ஃபோன் எண் இருவரிடமும் இருப்பது நல்லதுதானே" என்று வினவ; என் எண்ணுக்கு அவர் ஒரு அழைப்பு கொடுக்க; "ஓ மை காட்" என்று அவர் எண்ணை என் தொடர்பு பட்டியலில் நான் சேர்த்து வைத்தேன்

அவர் என் பெயரைக் கேட்க" த லாஸ்ட் ஷீப்.. சந்திரிகா" என்று சேமித்து வைத்துக் கொள்ளுங்கள்" என்று விடை பெற்று நகர்ந்தேன்;" அவ்விடம் விட்டு. அவர் முகம் எனக்கு மிகவும் தெரிந்த முகமாகத் தோன்றியது; ஆம் நான் கடவுளை அடிக்கடி பார்க்கிறேன்.. பல உருவங்களில். அவருக்கு என் முகம் தெரிந்திருக்கிறது என்பதே எனக்குப் பெரிய ஆசிர்வாதம்.



அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

தத்துவம்



1. பொருள் வைக்க முடியாத பை எது?
தொப்பை

2. வேலைக்கு போற விலங்கு எது ?
பனிக்கரடி

3. கதவும் ஜன்னலும் இல்லாத ரூம் எது?
மஷ்ரூம்

4. அதிர்ஷ்டம் இல்லாத நகரம் எது ?
லக்னோ

5. சுவரில் இறங்காத ஆணி எது?
பிரியாணி .

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



நான் என்ன பாவம் செய்தேன்...?

இடித்துவிட்டு காருக்கு என்ன ஆச்சு என்று பார்க்கிறீர்கள்?

இப்படிக்கு,
எருமை...

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241

இனிய நண்பர்களே...
உங்கள் நண்பருக்கு
அழகிய ஆரம்பம் இன்று - ஈ
இதழை அனுப்பி இதழின்
வளர்ச்சிக்கு உதவுங்கள்...





இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp | இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp | இன்று ஈ இதழ்

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241



அவர்கள் வருகிறார்கள்...

இதோ.. அவர்கள் வருகிறார்கள்...
ஐந்தாண்டிற்கு ஒருமுறை
தேர்தல் திருவிழா கொண்டாடிட
வாக்குறுதிகளை
வஞ்சமின்றி வாரியிரைத்து
வசியம் செய்து
வயிற்றெறிச்சலைக் கொட்டிக்கொண்டு
வாரி சுருட்டிக் கொண்டு செல்ல...

இதோ.. வந்து விட்டார்கள்...
ஊசி முனையில் நோய்த்தொற்றை
ஒழித்திட எண்ணியே வீடுவீடாக...
நோய்த்தொற்றோ....
எதற்கும் அஞ்சாமல்
தன் அலைகளை
நீட்டிக்கொண்டே இருக்கிறது....

இயலாமையின் ஆற்றாமையில்
வெறும் கையை முழம் போட்டப்படி
உயிர் மிஞ்சினால்
போதுமென்ற நிலையில்
ம்ஹூம்... என்ன செய்ய?...
எல்லாம் விதியென்றே
ஒதுங்கியே செல்கிறான் மனிதன்
செயலற்ற நிலையில்...

சசிகலா திருமால்,
கீழப்பழுவூர்



அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்


அடுத்த இதழ்
வெளியாகும் நாள்
2025 ஜூன் - 4.
படைப்புகளை
31.05.2025-க்குள்
அனுப்பிவைக்கவும்.


இன்று ஈ இதழ் | இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp


அழகிய ஆரம்பம்...
இன்று எ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று எ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp


இன்று இதழுக்கு தொடர்ந்து எழுதிவரும் எழுத்தாளர்கள், ஊக்கப்படுத்துபவர்களுக்கு நன்றி...











அழகிய ஆரம்பம்...
இன்று எ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று எ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

இன்று இதழுக்கு தொடர்ந்து எழுதிவரும் எழுத்தாளர்கள், ஊக்கப்படுத்துபவர்களுக்கு நன்றி...











அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241



விளம்பர உலகில்...

- உங்கள் தாலுக்காவில் நீங்கள் ஒருவர் தான் விளம்பரதாரர்...

- உங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க...

- நல்ல விசயங்களை பகிர...

- உங்கள் Offer - களை உடனுக்குடன் தெரிவிக்க...

- தினசரி ஸ்டேட்டஸ்... மினி வீடியோ விளம்பரங்கள்

- 24 மணி நேரமும் செயல்படும் உங்கள் விளம்பரம்...

- சூப்பர் மார்க்கெட், நகைக்கடை ஜவுளிக்கடை நடத்துபவர்கள் மட்டும் **7094053241** என்ற எண்ணுக்கு உங்கள் விபரத்தை வாட்சப்பில் அனுப்பவும்

- சேர்ந்து கலக்குவோம்...

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp





"ஜோக் எழுத யோசிச்சி
யோசிச்சி நைட்ல
இவர் ரொம்ப உளற
ஆரம்பிச்சிட்டாரு டாக்டர்!"

"நல்லா கேட்டீங்களா...
ஜோக்கா இருக்க
போவுதுங்க!"

ப.சோமசுந்தரம், சென்னை
போன்: 8778414755



அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
70940 53241

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

1. வாழ்க்கையே சிக்கலாயிடிச்சின்னு சொல்றீங்களே நீங்க என்ன வியாபாரம் பன்றீங்க?

இடியாப்ப வியாபாரம் பன்றேன்

2. மயிரிழையில் உயிர் தப்பினேன்டா...

எப்படிடா?

கடைசி நிமிஷம் டாக்டர் என்னோடு ஆபரேஷன . கேன்சல் பன்னிட்டார்



ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.
கைப்பேசி -9600886441.

”கர்ப்பமா இருக்கற அரசு ஊழியர்கள்லாம் அரசுக்கு கோரிக்கை வெச்சிருக்காங்களாம்”

”என்ன கோரிக்கை?”

”அவங்களை "தாய்மைப் பணியாளர்கள்" னு அழைக்கணுமாம் ”

டீ.என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம் சென்னை
கைபேசி: 9884808965



1.. என்னங்க... நம்ப பொண்ணு நம்ப பையனப் போட்டு அடி பின்னி எடுக்கிறாள்ங்க....

என்னை மாதிரியே என் மருமகனும் எதிர்காலத்தில் அடி வாங்குவான்னு தெரியுதுடி...!

2.. இன்ஸ்பெக்டர் அங்கிள்... என் அப்பாவை எருமை மாடு துரத்திட்டு வருது..

என்னடா உளர்றே... உங்க அம்மா தானேடா துரத்திட்டு வர்ராங்க ?

அதைத்தான் சார் நானும் சொன்னேன் !

எம் அசோக் ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

70940 53241




இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

உன்னை விட்டு
விலகுவதும் இல்லை
தூரம் செல்வதும் இல்லை
அந்த இரட்சகனை போல
என்றும் உன்னை காப்பேன்!

அதிகம் யோசிக்காதே
உன்னை நேசிக்க
எப்போதும் நானிருக்கிறேன்!

உன்னோடு கைகோர்த்து
கோயில் போகும் போதெல்லாம்
குழப்பம் தானடி?
யார் கடவுளென்று!

புதுக் கவிதை





-லி.நௌஷாத் கான்-
செல் : 971561093550

கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை
வெளியிடுபவர், ஆசிரியர். வெ.கோபிநாத்

செல் 7094053241 indhrumail@gmail.com

இன்று இதழை படித்ததற்கு
நெஞ்சார்ந்த நன்றி...



THANKS
Chat GPT
Meta AI &
All
Social Media